தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

கார்த்திகை 1, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 நவம்பர் 16, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி*
> *விழிப்பது போலும் பிறப்பு."*

நிலையற்ற வாழ்க்கையில், உறக்கத்திற்குப் பிறகு விழிப்பதைப் போன்றது பிறப்பு; திரும்ப விழிக்க முடியாத மீளா உறக்கம் கொள்வதே மறைவு.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. செ. சிவசாமி அவர்கள் 5–6–2004 அன்றும், திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் 13–8–2004 அன்றும், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் 5–10–2004 அன்றும், திரு. எ.தா. பொன்னுவேலு அவர்கள் 7–11–2004 அன்றும் மறைவுற்ற செய்தியினை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி அவர்கள் இளையான்குடி தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் மானாமதுரை தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 முதல் 1967 வரை மற்றும் 1967 முதல் 1971 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் திருவட்டாறு தொகுதியிலிருந்து தொடர்ந்து மும்முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 வரை, 1971 முதல் 1976 வரை மற்றும் 1977 முதல் 1980 வரை போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எ.தா. பொன்னுவேலு அவர்கள் வரகூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பாலஸ்தீன அதிபர் திரு. யாசர் அராபத் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். பாலஸ்தீன அதிபர் திரு. யாசர் அராபத் அவர்கள் மறைவு குறித்து கீழ்க்காணும் இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்:

"40 ஆண்டு காலமாக பாலஸ்தீன மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவரும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரும், பாலஸ்தீன மக்களுக்காக சுதந்திர நாடு ஒன்றை உருவாக்குவதே தனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவரும்,